**10.03.2026**

**அ.வ.எண். 24/2021**

**வா.சா.1 – திரு. சிவசாமி, த/பெ.ராமசாமி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 10.03.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. என்னுடன் பிறந்த சகோதரிக்கு என் பெற்றோர் தான் திருமணம் செய்து வைத்தனர் என்றால் இல்லை. நான் தான் திருமணம் செய்து வைத்தேன். மேற்படி திருமணத்தில் என் பெற்றோர் கலந்துகொண்டனர் என்றும், அனைவரும் சேர்ந்து திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். என்னுடைய திருமணத்தில் என் பெற்றோர்கள் கலந்துகொண்டனர் என்றால் ஆமாம். நானாக செய்து கொண்டேன். பாகம் பிரிக்காத சொத்துக்களை என் தகப்பனார் ஜுவனாம்சம் செய்து வைத்தார் என்றால் ஆமாம். 1/3 பங்கு சொத்தை ஜுவனாம்சம் செய்து வைத்தார். வா.சா.ஆ.1 ஜுவனாம்ச செட்டில்மெண்ட் பத்திரத்தில், 1/18 பாகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. என் அப்பாவும், என் சித்தப்பாவும், என் தாத்தாவும் வாய்மொழியாக சொத்துக்களை பாகம் செய்து கொண்டனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஜுவனாம்ச செட்டில்மெணட்டிற்கு பின்னிட்டு மேற்கண்டவாறு வாய்மொழியாக சொத்துக்களை பாகம் செய்து கொண்டனர் என்றால் சரிதான். அவ்வாறு பிரித்து கொண்ட சொத்துக்களை வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக பழனிச்சாமிக்கு விற்பனை செய்யப்பட்டது என்றால் கூட்டாக இருக்கும்போது சொத்தை விற்பனை செய்துவிட்டனர். அதனால் என் தாத்தா கையொப்பம் செய்துள்ளார். கூட்டாக இருக்கும்போது சொத்தை விற்பனை செய்தாலும், என் அப்பா மற்றும் என் தாத்தாவிற்கு வந்த பங்கையும், எங்களுடைய பங்கையும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் கிரயம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் என் அப்பா ஜுவனாம்சம் கொடுத்த பின்னிட்டு தான் விற்பனை செய்துள்ளார்.

3. வா.சா-ஆ.1 பத்திரத்தில் ஆயுள் வரை அனுபவம் செய்து கொள்ளலாம் என்றும், அவரது ஆயுளிற்கு பின் எனது அப்பா மற்றும் நாங்கள் அனுபவம் செய்து கொள்ள வேண்டியது என உள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் அமல்படுத்தப்படவில்லை என்றும், என் அம்மா சொத்துக்களை அனுபவம் செய்து வரவில்லை என்றும், அதனால் இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 14ன் சரத்துக்கள், என்னுடைய வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல, என் அம்மா தான் ஆயுள் வரை அனுபவம் செய்து வந்தார். என் தகப்பனார் எப்போதாவது வருவார். என் அம்மாவின் ஆயுளிற்கு பின்னிட்டு நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம். என் அம்மா இறந்த பின்னிட்டு, நாங்கள் அனுபவம் செய்து வருவதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில், சாட்சி கையொப்பம் செய்தவர்கள் யாரென்று தெரியுமா என்றால் நான் படிக்கவில்லை. வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில், சாட்சி கையொப்பம் செய்தவர்கள் வளையபாளையம் கிராமம் காளியப்ப கவுண்டர் மகன் பழனிக்கவுண்டர், சடையப்ப கவுண்டர் மகன் பழனிச்சாமி என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். பத்திர அலுவலகத்தில் ஆவணத்தை பதிவு செய்யும்போது, சிட்டாவை தாக்கல் செய்தால் தான் பதிவு செய்ய முடியும் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள பக்கம் 28 ல் உள்ள, சிட்டா ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். அதில் பிரதிவாதிகளின் பெயரும் மற்றும் 2ம் பிரதிவாதியின் சித்தப்பா வேலுச்சாமியின் வாரிசுகள் பெயர் பட்டா எண்.1102 வில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 புலப்படத்தில், சொத்துக்களை தென்வடலாக அனுபவம் செய்து வந்தேன். புலப்படத்தில் 467/B1i சொத்துக்களில் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள 93 ½ சென்ட் பூமி போக மீதமுள்ள சொத்துக்கள் எந்த சர்வே எண்ணில் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் புல எண்.467/B1F ல் உள்ளது. மீதமுள்ள சொத்துக்கள் புல எண்.467/B1F ல் உள்ளது என்பதற்கு ஆவணம் உள்ளது என்றால் ஆமாம்.

6. பிரதிவாதிகள் வா.சா.ஆ.2 ஆவணப்படி உள்ள கிரய சொத்தையும் மற்ற சொத்துக்களையும், தென்வடலாக அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் தெரியாது. 93 ½ சென்ட்டை 2ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என அனுமானத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா 10.05.2014 ல் இறந்தார் என்றும், அவர் இறந்த பின்னிட்டு உடனடியாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் என் அம்மா அனுபவம் செய்து வந்து இறந்துவிட்டார், பின்னிட்டு என் அக்கா அங்கு இருந்தார். நான் கோயம்புத்தூரில் இருந்தேன். என் அப்பா இறக்கும்வரை ஆவணம் குறித்து தெரியாது.

7. என் அம்மா உயிருடன் இருந்தவரை சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்றும், அதனால் தான் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா அனுபவம் செய்திருந்தால், அவர் இறந்து 3 ஆண்டுகளுக்குள் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், மேற்படி வழக்கு காலதாமத தடை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த பின் எதற்காக வில்லங்கம் பார்த்தேன் என்றால் பட்டாவை பெயர் மாற்றம் செய்ய பார்த்தேன். வா.சா.ஆ.2 கிரய ஆவணம் குறித்து என் பெற்றோர் உயிருடன் இருந்தபோதே எனக்கு ஏற்கனவே தெரியும் என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்ய வேண்டி என் பெற்றோர் இறந்த பின்னிட்டு வில்லங்கம் எடுத்து பார்த்தேன் என்றால் சரியல்ல.

8. வா.சாஆ.7 வில்லங்க சான்றிதழில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணத்தில் 12.12.1978 விடுதலை பத்திரத்தை 2, 3ம் பிரதிவாதிகளின் தகப்பனார் ஆறுமுகம் மற்றும் அவரது சகோதரர்கள் பழனிச்சாமி மற்றும் வேலுச்சாமி ஆகியோர்களுக்கு, அவரது சகோதரரிகள் சுப்பாத்தாள் மற்றும் ரங்கம்மாள் வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களை விடுதலை எழுதி கொடுத்துள்ளனர் என்றால் இருக்கலாம். வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி, பிரதிவாதிகள் குடும்பத்தினர் தான் வழக்கு சொத்தையும் அனுபவம் செய்து வந்தனர் என்றும், அதனால் தான் 1978 ம் ஆண்டு விடுதலை ஆவணம் எழுதி கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல, நாங்கள் தான்

அனுபவம் செய்து வருகிறோம்.

9. வா.சா.ஆ.7 வில்லங்க சான்றிதழில் வரிசை எண்.16 ல், 4 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதிக்கு புல எண்.467/ B1i ல் உள்ள 1 ஏக்கர் சொத்தை தான செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்று குறிப்பு உள்ளது என்றால் வில்லங்க சான்றிதழை பார்த்து தெரிந்துகொண்டேன். 4 ம் பிரதிவாதி தனக்கு பாகத்தை தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது, எனவே 4 ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. என் தாத்தா ரங்கப்ப கவுண்டர் பூர்வீக சொத்துக்கள் மட்டுமின்றி கிரய வகையிலும், சொத்துக்கள் வாங்கி இருந்தார் என்றால் ஆமாம், வாங்கியுள்ளார் மற்றும் விற்றுள்ளார். அதற்கும், இதற்கும் சம்மந்தமில்லை.

10. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மூலமாக, என் தாத்தா ரங்கப்ப கவுண்டர், ஒரு காளியப்ப கவுண்டர் மற்றும் சடையப்ப கவுண்டர் மற்றும் மசாக்கவுண்டர் ஆகியோரிடமிருந்து 30.06.1938 தேதியில் மோப்பிரிபாளையம் கிராம புல எண்.467/A1, 477/ A சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். **30.06.1938 தேதியிட்ட ரங்கப்ப கவுண்டர் பெயரில் உள்ள கிரய பத்திரம் பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.சா.ஆ.2 ஆவணத்தை கிரயம் கொடுத்த காளியப்ப கவுண்டர் தான், 2 முதல் 4 பிரதிவாதிகளின் தாத்தா என்றால் சரிதான். காளியப்ப கவுண்டரின் வாரிசுகள் தான் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை ஆறுமுகம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்கும், வழக்கு சொத்திற்கும் சம்மந்தமில்லை.

11. காளியப்ப கவுண்டரின் மற்றொரு வாரிசுதான் வா.சா.ஆ.2 ஆவணத்தை கிரயம் பெற்ற பழனிச்சாமி என்றால் சரிதான். 1938 காலம் முதல் 1969, வாசா.ஆ.2 ஆவணம் வரை எங்கள் குடும்பத்திற்கும், பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் சொத்து சம்மந்தமாக பரிமாற்றம் நடந்து வந்தது என்றால் சரிதான். புல எண்.467/ B1i சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் நினைவில்லை. தாவா சொத்துக்கள் பட்டா எண்.1102 மற்றும் 2507 ஆகியவற்றில் இருந்து வருகிறது என்றால் தெரியாது. மேற்படி வழக்கு சொத்துக்களை பிரதிவாதி குடும்பத்தார் அனுபவம் செய்து வந்து அதற்கு கந்தாயம் செலுத்தி வந்தனர் என்றால் அது பற்றி

தெரியாது.

12. என் அம்மா உயிருடன் இருந்தபோதும், அவரது இறப்பிற்கு பின்னிட்டும் தாவா சொத்துக்களை அனுபவம் செய்யவில்லை என்றும் அதனால் தான் மேற்படி விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் ஆறுமுகம் பெயரில் பட்டா பாஸ் புத்தகம் ஏற்பட்டுள்ளது என்றால் இருக்கலாம்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur